**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I - 2019**

---

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்-பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுரம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5,166 மில்லியன் ஜப்பான் ஜென் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,789 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 1,651 மில்லியன் ஜப்பான் ஜென் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிட்டிருந்தது. பினனர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2020 யூலை 05 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இவ் அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான

கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை<br>-- மில்லியன் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அந்நியச் செலாவாணித் திணைக்களத்தின் அறிக்கையில் கொடுப்பனவாகக் காட்டப்பட்ட தொகைக்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்குமிடையே ரூபா 4.49 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது. | 4.49 | நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கொடுப்பனவு குறைத்துக் கூறப்படுதல் | கொடுப்பனவு அறிக்கை சாதாரணமாகவே பிற்போட்ட ஒரு திகதிடையே குறிக்கும். 2019 ஆம் ஆண்டிற்கான புள்ளி விபரங்களை முடிவு செய்த போது அது நாளது வரையாக்கப்பட்டிருந்தது. ஆகவே, இது 2020 முதலாம் தவணையில் கணக்கிலிடப்பட்டுள்ளது. | கடன் பிரிவு முகாமைத்துவ முறைமை (DRMS) அறிக்கையுடன் கணக்கினக்கம் செய்யப்பட வேண்டும். |

### 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளது பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகளில் 85.13 சதவீத செயல் முன்னேற்றம் எய்த வேண்டிய போதும், செலவுத்திட்டத்தினது நடவடிக்கைகளது ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 54.35 சதவீதமாகவிருந்தது. இதன் காரணமாக, செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 யூலை 05 வரை இரு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தன. நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம் பின்வருமாறு.

| இல. | நடவடிக்கை | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான பௌதீக செயலாற்றல். திட்டமிடப்பட்டது. | எய்தியது | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | -- | -- % | % | | | |
| (i) | மதியுரைச் சேவை | 88.9 | 83.1 | மதியுரை ஒப்பந்த காலப்பகுதி ரூபா 62.09 மில்லியன் மேலதிக கிரயத்துடன் நீடிக்கப்பட்டது. | மதியுரை ஒப்பந்தம் ஆரம்பத்தில் 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. மேலே 1.3 (அ)(i) மற்றும் (ii) என்பவற்றுக்கமைய, பாரிய வேலைகள் நீடிக்கப்பட்டன. பாரிய ஒப்பந்த வேலைகளும் நிறைவேறும் வரை ஜேஜசீர உடன்படிக்கையின் பிரகாரம் மதியுரை ஒப்பந்தம் நீடிக்கப்பட வேண்டும். | நிர்மாண வேலைகளைத் துரிதப்படுத்தியிருந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | உள்வாங்கல் வசதி, நீர், சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, நிலத்தடிக் | 81.2 | 27.0 | செயற்திட்டத் தாமதத்திற்கான சாத்தியம் | உள்ள நிர்மாண வேலைகளில் தாமதம் பின்வருமாறு ரம்பேவ காணியைப் | வேலைகளை துரிதப்படுத்தி ஒப்பந்த வேலைகளைத் கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குழாய்கள்-தாங்கிகள் அலுவலகக் கட்டிடங்கள், இயந்திர மற்றும் மின்சார வேலைகள் (தொகுதி–ஏ) | | | | பொறுபேற்பதில் தாமதம் சரியாக ஓராண்டு தாமதமாகியது ரம்பவே காணியின் (தொகுதி – ஏயின் 2 ஆம் பாரிய கூறு) சகல நிர்மாண வேலைகளும்<br>- வெடிப் பொருட்களது வழங்கல் மட்டுப்படுத்தபட்டமை பாறைகளைத் நகர்ப்பதற்காக கொருட்களும் ஈஸ்டர் ஞாயிறு தாக்கம் காரணமாக தொழிலாளர் பற்றாக்குறையும்<br>- ஒப்பந்தக்காரது பில் போன்றன கொடுப்பனவு செய்யப்படாது வேலை தாமதமாகியமை | |
| (iii) | உயர் சக்தி பொலி அத்தலீன் குழாய்களை (எச்டீபீஈ) வழங்கி அதனைப் பதித்தல் முக்கிய கடத்தி மற்றும் விநியோகம் (தொகுதி – பீ) | 97.0 | 68.2 | செயற்திட்டத் தாமதத்திற்கான சாத்தியம் | ஒப்பந்தக்காரர் 2019 ஏப்ரல் முதல் மே வரை தனது வேலையை மந்த கதியில் மேற்கொண்டு 2019 ஒக்டோபர் 31 முதல் 2020 சனவரி இறுதி வரை வேலையை இடை நிறுத்தியிருந்தார் மாதாந்த பில் கொடுப்பனவு - இதற்கான காரணமாகும். சகல | வேலைகளை துரிதப்படுத்தி ஒப்பந்த வேலைகளைத் கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | வேலைகளும் நிறுத்தப்பட்டு டீ தொகுதி வேலைக்கான மூல வளம் தற்காலிகமாக வேறு வேலைகளுக்கு மாற்றஞ் செய்யப்பட்டன. B தொகுதி வேலை – தாமதமாவதற்கு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலும் காரணமாக அமைந்தது. | |
| (ஸ) | இஸ்ஸின்பெஸ்ஸகல வலயத்தில் ருீஏநு குழாய்கள், பொருத்திகள், விசேட உபகரணங்களைப் பொருத்துதலும் நுஜஜ மற்றும் புஜஜ குழாய்கள் மற்றும் விசேட உபகரணங்களை வழங்கி பொருத்தலும். | 100 | 95 | ஒப்பந்த பூர்த்தியாக்கல் தாமதமடைவதற்கான சாத்தியம் | பொருட் கொள்வனவுக் கட்டத்தில் குறிப்பிடத்தக்க தாமதத்தின் பின்னர் யுறேுளீ – 1 ஆம் கட்டத்திற்குரிய பாரிய வேலைகள் 2017 டிசெம்பரிலும் 2018 மார்ச்சிலும் ஒப்படைக்கப்பட்டிருந்தன.<br><br>ஆகவே, பாரிய ஒப்பந்த வேலைகளுக்கும் பின்னரே சிறியலவிலான ஒப்பந்த வேலையின் சுத்திகரிப்பு இடம்பெறும். அதற்கமைய, சுத்திகரிப்பையே மீதி 5மூ வேலை முன்னேற்றமும் சாரும். | ஒப்பந்தக்காரின் வேலைகள் கூர்ந்து கவனிக்க வேண்டும். |
| (v) | ரம்பேவ, கிழக்கு ரம்பேது, ஏத்தகட | 100 | 95 | - | 119.1 கி.மீ நீள தூரத்தில் 117.90 கி.மீ தூர நீளக் குழாய்கள் | ஒப்பந்தக்காரரின் வேலைகள் கூர்ந்து கவனிக்க வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வலயங்களில் (தொகுதி-3) UPVC குழாய்கள், பொருத்திகள், மற்றும் விசேட உபகரணங்களைப் பதித்தல், D1 மற்றும் G1 குழாய்கள் பொருத்திகள் மற்றும் விசேட உபகரணங்கள், என்பவற்றை வழங்குதலும் பதித்தலும் (தொகுதி சீ – 3) | | | | பதிக்கப்பட்டும் 119.1 கி.மீ நீள தூரத்தில் 40.70 கி.மீ தூரத்திற்கு வேறுபாட்டு அறிவுறுத்தலுக்கு அமையவும் குழாய்கள் பதிக்கப்டப்டுள்ளன. வேலை நீடிப்புக்கான காலம் வழங்கப்பட்டுள்ளது. | |
| (vi) | செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு உபகரணங்களை வழங்குதலும் விநியோகித்தலும் | 100 | 87.5 | இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லக் கூடிய மின் உற்பத்திச் சாதனங்களை விநியோகிப்பதில் தாமதம் | 3 KVA மின் உற்பத்திச் சாதனங்கள் கிடைக்கப் பெறாது 2020 செப்டெம்பர் 17 ஆந் திகதி 3 மின் உற்பத்திச் சாதனங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக மீண்டும் கூறு நிலைக்கு கோரப்பட்டன எமது 2020 செப்டெம்பர் 17 ஆந் திகதிய வேண்டுகோளுக்கிணங்க “3KVA யின் உற்பத்திச் சாதனங்களுக்கு கூறுவிலைகள் பெறப்படாமையால் உடனடியாக 5KVA பெறப்படலாம்” என | இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லக் கூடிய மின் உற்பத்திச் சாதனக் கொள்வனவு துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 2020.11.17 அன்று DGM ASC (NC) பரிந்துரை செய்திருந்தார்.<br><br>DGM (NC) மேலே அறிவுறுத்தியவாறு பொறியியலாளரின் மதிப்பீட்டையும் தொடர்புடைய மாதிரி வழங்கல்களையும் இயந்திரத்தால் இயக்கப்படும் 5 KVA யின் உற்பத்திச் சாதனங்களை RSC (NC) க்கு வழங்குமாறு 2020 டிசெம்பர் 02 ஆந் திகதியன்று செயற்திட்டக் கண்காணிப்பு பிரிவு (PMU) சமர்ப்பித்திருந்தது. |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயங்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | செயற்திட்டம் ஆரம்பமாகி 4 ஆண்டுகளும் 09 மாதங்களும் கடந்த பின்னரே 2018 மார்ச் 23 ஆந் திகதியன்று உள்வாங்கல் வசதி, நீர் அதிகரிப்பு, நிலத்தடிக் குழாய்கள், உயரத்தில் அமைந்த தாங்கிகள், அலுவலகக் கட்டிடங்கள், இயந்திர மற்றும் மின் வேலைகள் (தொகுதி – ஏ) என்பன வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், சகல வேலைத்தளங்களினதும் கட்டிட வேலைகளும் கொங்கிரீட் வேலைகளும் நடைபெற்றவாறிருந்தன. இறுதி வேலைகளும் தொடங்கப்பட்டு 2019 | செயற்திட்டம் தாமதம் அடைவதற்கான சாத்தியம் | தொகுதி ஏ வேலை வழங்கல் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட தாமதம் ANWSP P1 இன் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் கட்டுபாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். எவ்வாறாயினும், ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களின் நிமித்தம் 2022 யூலை வரை | வேலையைத் துரித ஒப்பந்தக்காரரின் வேலையைக் கடந்து கண்கானிக்குமாறு அறிவுறுத்தப்பட வேண்டும். |

டிசெம்பர் மாதமளவில் கால்வாய் வேலைகள் முடிவடைந்திருந்தன. ஒப்பந்தத்தின், செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையின் பௌதீக முன்னேற்றம் 81.23 சதவீதம் நிறைவேறுவதை எதிர்பார்த்த போதும் மீளாய்வாண்டு இறுதியளவில் ஒட்டுமொத்த பௌதீக செயல் முன்னேற்றம் 27 சதவீதமாக இருந்தது.

செயற்திட்டம் ஒரே தடவையில் வழங்கப்பட்டது.

2013 மே மாதத்தில் செயற்திட்டம் ஆரம்பமாகிய போதும், கணக்காய்வு வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பாரிய ஒப்பந்த வேலைகளை ஒப்படைக்கையில் கொள்வனவிலும் கேள்வி கோரல் கட்டத்திலும் பெருமளவு காலதாமம் ஏற்பட்டடிருந்தது தொகுதி நடைமுறை நிர்மாண வேலைத் தாமதத்திற்கு காரணம் ஆகியவை பின்வருமாறு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் வெடிபொருள் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டமை. நாட்டில் நிலவிய போக்குவரத்துக் கட்டுப்பாடு காரணமாக தொழிலாளர் வரவு பற்றாக்குறை ரம்பேவ காணியைச் சுவீகரித்தல்.

சரியாக ஓராண்டு தாமதத்துடன் ரம்பேவ காணியின் சகல நிர்மாண வேலைகளும் (A தொகுதியின் 2 ஆம் பரிய கூறு) ரம்பேவ காணி வடிகால் ஓராண்டு பின்னைடைவுக்குள்ளாகின.

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | உயர் சக்தி பொலி அத்தலின் குழாய் (HDPE) பிரதான கடத்தல் மற்றும் பிரதான விநியோக (தொகுதி பீ) 2017 நவம்பரிலும் வழங்கப்பட்டது. 2019 டிசெம்பர் 11 ஆந் திகதியளவில் வேலைப் பூர்த்தியாவது எதிர்பார்க்கப்பட்டது. 2019 டிசெம்பர் 31 இல் திட்டமிடப்பட்டவாறு வேலை பூர்த்தியாகத போதும், ஒப்பந்தத்தின் பிரகாரம் 252,353 மீட்டருக்கு குழாய்கள் மதிக்கும் வேலையில் 194,504 மீட்டரும் 69,897 மீட்டரும் அழுத்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டு முடிவில் எய்துவதற்கு திட்டமிடப்பட்ட 100 சதவீத இலக்கில் பின்னடைவு ஏற்படும் விதத்தில் ஒட்டுமொத்த பௌதீக செயல் முன்னேற்றம் 68.18 சதவீதமாக இருந்தது. இதன் விளைவாக ஒப்பந்தக் காலம் 2020 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டம் தாமதம் அடைவதற்கான சாத்தியம் | ஒப்பந்தக்காரர் தனது வேலையை 2019 ஏப்ரல் முதல் மே வரை 3 மாதங்களுக்கு தாமதித்து இருந்தாக அதாவது **2019 ஒக்டோபர் 31 முதல் 2020 சனவரி இறுதி வரை** அவரது பில் செலுத்தப்படாது போனமை இதற்கான காரணமாகும். சகல வேலைகளும் நிறுத்தப்பட்டு B தொகுதிக்கான முற்பணங்கள் ஏனைய வேலைத் தளங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தன. **ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலும் B தொகுதி வேலையில் பெரிய தாமதத்தை ஏற்படுத்தின.** பாறைத் தகர்ப்பு வேலைக்கு குந்தகம் விளைக்கும் விதத்தில் வெடி பொருள் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடு காரணமாக தொழிலாளர் வருகை தருவது இல்லாது போனது. | வேலையைத் துரிதப்படுத்துமாறு ஒப்பந்தக்காரர் அறிவுறுத்தப்பட்டு அவரது வேலைகள் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும். |
| (iii) | 2018 ஏப்ரலில் நிறைவடையத் திட்டமிடப்பட்டவாறு – குழாய்கள், பொருத்திகள், விசேட உபகரணங்கள் என்பற்றால் பதித்தல் Di மற்றும் Gi குழாய்களை வழங்குதலும் | ஒப்பந்தம் பூர்த்தியாவதில் தாமதம் ஏற்படுவதற்கான சாத்தியம் | பொருட் கொள்வனவுக் கட்டத்தில் குறிப்பிடத்தக்க தாமதம் காரணமாக ANSWSP 1 ஆம் | கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கையில் ஒப்பந்தக்காரரின் வேலை நடவடிக்கைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதித்தலும் (C 1 தொகுதி) 2016 ஒக்டோபரில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் 95 சதவீதமாக இருந்தது. அத்தினத்தில் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக சேவை முன்னேற்றம் 100 சதவீதமாகும். இதன் விளைவாக, மீதி வேலைகளை நிறைவேற்றுவதற்கு 2020 பெப்ரவரி 29 வரை ஒப்பந்த நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | | கட்ட பாரிய ஒப்பந்த வேலைகள் 2017 டிசெம்பரிலும் 2018 மார்ச்சிலும் வழங்கப்பட்டிருந்தன. ஆகவே, பாரிய வேலைகளுக்கு முன்னரே சிறிய வேலைகள் ஒப்படைக்கபட்டடிருந் தன. இரு பாரிய வேலைகளுக்கு முதலிலேயே கழுவுதல் தொற்று நீக்குதல் என்பன நடைபெறும் அதற்கமைய, வேலை முன்னேற்றத்தின் எங்சிய 5% கழுவுதல் தொற்று நீக்கல் பணிகளாகும்.<br><br>மேலும். பொது மக்களின் பல – குழாய் நீர்பாதையை விரிவடையச் செய்தல் இதே ஒப்பந்தத்தில் எஞ்சும் தொகை மூலம் மேற்கொள்ளப்படுவது ம் நீடிப்புக்கான காரணமாகும்.<br>- | கூர்ந்து கவனிக்க வேண்டும். |
| (iv) | நீர்பாசணத் திணைக்களத்திற்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.5 ஆம் பந்தியின் பிரகாரம் மஹகனதரவ வாவியைப் புனரமைத்து அதிலிருந்து அனுராதபுரம் வடக்கு நீர் விநியோக செயற்திட்டம் 1 ஆம் கட்டத்திற்கு நீர் வழங்க எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், புனரமைப்பு வேலை தாமதமாகியது நீர்ப்பாசனத் திணைக்களத்தால் முன்மொழிதல் சமர்ப்பிக்கப்பட்டமையும் பொறியியலாளர் மதிப்பீடு | செயற்திட்டத்தில் தாமதம் ஏற்படுவதற்கான சாத்தியம் | பதில் வழங்கப்படவில்லை . | புரிந்துணணர்வு ஒப்பந்தப் பிரகாரம் புனரமைப்பு வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு முடிவடைய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இல்லாமையும் இதற்கான காரணமாகும். | | | |
| (v) | 2017 ஒக்டோபர் 15 ஆந் திகதி முடிவடையத் திட்டமிடப்பட்ட 129 மில்லியன் யப்பானிய யென்னுக்குச் சமமான ரூபா 218 மில்லியன் கிரயத்தில் 2014 யூன் 23 ஆந் திகதியன்று செயற்திட்டத்திற்கான மதியுரை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் வழங்கப்படுவதில் தாமதம், நிர்மாண வேலை மெதுவாக நடைபெற்றமை காணிச் சுவீகரிப்பு தாமதம் போன்றவற்றால் மதியுரைக் காலப்பகுதியினுள் செயற்திட்டம் முடிவடையாது போனது இதன் விளைவாக, ரூபா 62.09 மில்லியன் மேலதிக கிரயத்துடன் மதியுரை ஒப்பந்த காலப்பகுதி 2020 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டது. | செயற்திட்டத்திற் குரிய அதிகரிப்பு | ஆரம்பத்தில் மதியுரை ஒப்பந்தம் 2017 ஒக்டோபர் 31 இல் முடிவடையாதிருந்தது. மேற் கூறிய 1.3 அ(i) மற்றும் (ii) என்பவற்றின் பிரகாரம் பாரிய வேலைகள் நீடிப்புக்குள்ளாகின. இரு பாரிய ஒப்பந்த --- முடிவடையும் வரை JICA தேவைகளுக்கு ஏற்ப மதியுரை ஒப்பந்தம் நீடித்தது. | நிர்மாண வேலையை துரிதப்படுத்த திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூல வளங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் 1 ஆம் கட்ட செலவின பட்டோலையின் பிரகாரம் ரூபா 10,114 மில்லியனுக்கு நிகரான 8,739 மில்லியள் யப்பானிய யென் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 32 சதவீதத்தைக் குறிப்பும் ரூபா 3,308.5 மில்லியன் மாத்திரமே 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மதிப்பிடப்பட்ட 41 மில்லியன் யப்பானிய யென் கடப்பாட்டுக் கட்டணத்தில் 69 சதவீதத்தைக் குறிக்கும் 28.3 மில்லியன் யப்பானிய யென் கடன் வழங்கும் முகவர் நிலையத்தால் அறவிடப்படடிருந்தது. | கடப்பாட்டுக் கட்டணம் மேலதிகமாக அறவிடப்படுவதற்கான சாத்தியம். | 2019 இறுதியில் உள்ளவாறான கடப்பாட்டு கட்டணம் 28.3 மில்லியன் யப்பானிய யென்னாகும். இது 2019 இறுதி வரையிலான மொத்த ஒதுக்கீட்டின் 69 சதவீதமாகும். கடப்பாட்டுக் கட்டணத்தைக் குறைப்பதற்கு செயற்திட்ட முகாமைத்துவக் குழு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனும் | செயற்திட்டக் கால நீடிப்புக்கும் அதனை நிறைவு செய்வதற்கும் உயர்ந்தளவு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இணைந்து உயர்ந்தளவில் முயற்சிகளை மேற்கொள்கின்றது. | |

### 3.4 சர்ச்கைக்குரிய விடயங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு முரணாக செயற்திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளமும் ஊதியமுமாக 2015 மார்ச் முதல் 2019 யூலை வரை ரூபா 2.26 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. | தொடர்பற்ற நடவடிக்கையால் செயற்திட்டக் கிரயம் அதிகரிப்புக்குள்ளானது. | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட பதவியணி தொடர்பாக செயற்திட்ட ஒருங்கிணைப்பாளரை ஆட்சேர்ப்பதற்காக உட்புகுத்தல் இல்லாத போதும், 2015 ஏப்ரல் 02 ஆந் திகதிய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தீர்மானத்தின் படி செயற்திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு புதிய பதவி உருவாக்கப்பட்டது. இதன் பொருட்டு பொறியியல் உததியோகத்தர் (சிவில்) பதவி இல்லாதொழிந்தது.<br><br>இதற்கமைய, செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் 2015 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் நியமிக்கப்பட்டு 2019 மே வரை சம்பளத்தையும் ஊதியத்தையும் பெற்றுள்ளார்.<br><br>இந்த நியமனம் தேசிய நீர் வழங்கல் மற்றும் | செயற்திட்ட நிதி தொடர்புடைய நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டும். |

வடிகாலமைப்புச் சபையால் மேற்படி பணிப்பாளர் சபையினது தீர்மானத்தின்படி நடைபெற்றதாகும். இது செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்டதாகும். தேவை ஏற்படின் உங்களது மேலதிக விளக்கத்திற்கு எந்தவொரு ஆவணத்தையும் எம்மால் வழங்க முடியும்.

### 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல | கணக்காய்வு விடயங்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தின் குறைபாட்டுப் பொறுப்புக் காலப்பகுதிக்கு ஈடு செய்யக்கூடியவாறு மதியுரைச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னர் மதியுரைச் சேவைக்கான துறைசார் பொறுப்புக் காப்புறுதி பெறப்பட வேண்டும். செய்றதிட்டத்தின் காலப்பகுதி 2022 யூலை வரை நீடிக்கப்பட்ட போதும்., 2019 / 2020 வரைக்கும் செயற்திட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியவாறான துறைசார் பொறுப்புக் காப்புறுதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டக் காலப் பகுதியையும் குறைபாட்டுக் காலப் பகுதியையும் செயற்திட்டத்தின் துறைசார் பொறுப்புக் காப்புறுதி ஈடுசெய்யவில்லை. | வழக்கப்படி காப்புறுதி வருடாந்த அடிப்படையில் புதுப்பிக்கப்படும். மதியுரையாளர் காப்புறுதி ஆவணங்களைக் காப்புறுதி செய்து காலப்பகுதியின் முடிவில் சாதனை செயற்திட்ட கண்ககாணிப்பு பிரிவுக்கு வழங்குவார். | செயற்திட்டத்தின் குறைபாட்டுக் காலப்பகுதியையும் உள்ளடக்கிய துறைசார் பொறுப்புக் காப்புறுதி பெறப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்ட நடவடிக்கைகளுக்கென 43 பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து 2014 பெப்ரவரி 19 ஆந் திகதியன்று செயற்திட்டம் பெற்றிருந்தது. எவ்வாறாயினும் 26 பதவியணியினர் ஆட் சேர்க்கப்பட்டு முக்கிய பதவிக்கான 04 பொறியியலாளர்கள் (சிவில்) 01 பொறியியல் உதவியாளர் (இலத்திரனியல்) | செயற்திட்ட வேலைகளது முறையான கண்கானிப்பை பாதிக்கும் | 2019 மே 21 ஆந் திகதி இலத்திரனியல் பொறியியலாளர் ஆட் சேர்க்கப்பட்டும் குறிப்பிடப்பட்ட 03 சிவில் பொறியியலாளர் ஏற்கனவே ஆட்சேர்க்கப்பட்டுமிருந் தனர். எனினும், அவர்கள் அவ்வப்போது விலகிச் சென்றிருந்தனர் | பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். |

மற்றும் 03 பொறியியல் உதவியாளர்கள் (சிவில்) போன்ற முக்கிய பதவிகள் உள்ளடங்கலாக 17 வெற்றிடங்கள் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் கண்காணிப்புக்கு இப்பதவிகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவிருந்தும். 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிரப்படாதிருந்தன.

வெற்றிடங்களை நிரப்ப முயற்சி செய்த போதும் செயற்திட்டக் காலப்பகுதி குறுகிய தொகையால் எவரும் முன்வரவில்லை.

இறுதியாக, WSP பிரிவின் மூலம் சிவில் பொறியியலாளர்களையு ம் பொறியியல் உதவியாளர்களையும் நியமிக்குமாறு கோரப்பட்டது.